# இயல் மூன்று

# காப்பியப் பண்புகள்

## 3 : 0 முகவுரை

ஒவ்வொரு இலக்கியத்திற்கும் ஒரு கட்டமைப்பு உண்டு. ஒரே மாதிரியான இலக்கிய வகையிலும்கூட ஆசிரியருக்கு ஆசிரியர் வேறுபடலாம். எடுத்துக்காட்டாக காப்பியங்கள் என்ற வகையில் உட்படுகின்ற சிலப்பதிகாரமும் சிந்தாமணியும் கட்டமைப்பு நெறியில் மாறுபட்டவை. கட்டமைப்பு என்பது காப்பியம், நாடகம் போன்ற புறவடிவங்கள் அன்று. ஆசிரியர் ஒலிகளை, சொற்களை, தொடர்களைப் பயன்படுத்திக் காப்பியம் படைத்தார்கள். எனினும் இவை அனைத்தையும் இணைக்கும் ஒருமைப்பாடு ஒன்று உள்ளது. அவ்வொருமைப்பாடுதான் அக்காப்பியத்துக்கு ஓர் உள்ளுறைப் பொதுப் பொருளைத் தருகின்றது. காப்பிய இலக்கியத்தை எடுத்துக் கொண்டால், அதன் பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைக்கும் ஒருமைப்பாடு ஒன்றைக் காணவியலும். ஆய்வாளர்கள் பெரும்பாலும் மேனாட்டினர் கொள்கைகளைப் பின்பற்றி வருகின்றனர். மேனாட்டுக் காப்பிய இலக்கணத்தை அரிஸ்டாட்டில் வகுத்தார். அவர் குறிப்பிட்ட கூறுகள் நிறைந்த காப்பியம் என வழங்கப்பட்டது. ஹோமர் கிரேக்க மொழியில் இயற்றிய ஒடிசியை மனத்திற் கொண்டு அரிஸ்டாட்டில் காப்பிய இலக்கணம் வகுத்தார். பிற்காலத்து எழுந்த காப்பியங்கள் இதை வைத்தே ஆராயப்படுகின்றன. கந்தபுராணம், புராணம் என்ற பெயர் பெற்ற ஒரு பெருங்காப்பியமாகும். ஆறு காண்டங்களாகவும், நூற்று முப்பத்தைந்து படலங்களாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இப்புராணத்தின்

காப்பியக் கதை என்பது 'சூரவதம்' என்பது பற்றியதாகும். காப்பிய நிகழ்ச்சிகள் அனைத்தும் இத்தலைமைப் பொருளை மையமாகக் கொண்டே பின்னப்படுகின்றன. சூர வதத்தின் உள்ளுறைப்பொருள் அறத்தின் வெற்றியாகும். சூரனை அழிப்பதற்காக முருகப்பெருமான் தோற்றுவிக்கப்படுகிறார். முருகனையே காப்பியத்தலைவனாகக் கொண்ட கந்த புராணத்தின் பெருங்காப்பியக்கூறுகளை ஆராய்வதே இவ்வியலின் சிறப்பு நோக்கமாகும்.

## 3. 1 வடமொழிக் காப்பியக் கொள்கை.

கந்தபுராணத்தின் முதனூலாகிய ஸ்காந்த புராணத்தில் வடமொழி நூலார் இயற்றிய காப்பியக் கூறுகள் பல காணப்படுகினறன. வடமொழி அணியிலக்கண நூல்களில் மகா காவிய இலக்கணத்தை ஓரளவிற்கு முதன் முதலில் விளக்கியுரைத்த பெருமை பாமஹருக்கு உரியதாகும். இவர் தம்முடைய காவியாலங்காரம் என்னும் நூலில் முதல் பரிச் சேதத்தில் (இயல்) ஒன்பது சுலோகங்களில் (செய்யுள்) அதன் இயல்புகளை விளக்கியுள்ளார் அவை பல சருக்கங்களைக் கொண்டிருப்பதால் மகா காவியம், சருக்க பந்தம் என பெயர் பெறுகின்றது. புகழ்மிக்க தலைவன் ஒருவனை மையமாகக் கொண்டு இது புனையப்பெறுகின்றது. இனிமையும் அழகும் நிரம்பியது அவிநயங்களும், சீரிய கருத்துகளும் நிறைந்து காணப்படுகின்றது. அரசருடைய மந்திராலோசனைக் கூட்ட நிகழ்ச்சிகள், தூது, போர்மேற் செலவு, போர்க்கள நிகழ்ச்சிகள் போன்றவை மகா காவியத்தில் விளக்கப்படுகின்றன. கதைத்தலைவனுடைய புகழும் வெற்றியும் விரிவாகப் புனையப்படுதல் வேண்டும். கதைவளர்ச்சி, நாடக உத்திகளைப்

பின்பற்றிப் படிப்படியாக வளர்தல் வேண்டும். எளிமையாகவும் இனிமையாகவும் அதன் நடை இருத்தல் வேண்டும். வாழ்க்கையின் குறிக்கோளான உறுதிப் பொருள்கள் நான்கினையும் காப்பியம் வற்புறுத்த வேண்டும். உலகியல் மக்களுக்குத் தேவையான அறிவுரைகளையும் வழங்குதல் வேண்டும். பல்வேறு உயர்ச்சிகளுக்கும் பொருத்தமான முடிவு கொடுக்கப்படுதல் இன்றியமையாதது. [1]

இவை, மகாகாவியத்தின் பொதுப்பண்புகளாகக் காட்டப்படுகிறது. காப்பியக் கதையை எவ்வாறு தொடங்க வேண்டும், எவ்வாறு முடிக்க வேண்டும் என்பதையும் எடுத்துக் கூறுகிறார்.

"கதைத்தலைவனுடைய குலப்பெருமை, தலைவனுடைய கல்வி, கேள்வி, வீரம், கொடை முதலிய பண்புகள் மகா காவியத்தின் தொடக்கத்தில் சிறப்பாகப் புனைதல் வேண்டும். தலைவனை இவ்வாறு தொடக்கத்தில் சிறப்பித்துப் பாடிய பின்னர், அவன் இறுதியில் தோல்வியுறுவதாகப் புனைதல் பொருத்த மற்றது. கதைத் தலைவன் வரலாறு மகா காவியம் முழுவதனுள் ஊடுருவி நிற்றல் இன்றியமையாதது. தொடக்கத்தில் புகழ்ந்து பேசப்பட்ட தலைவன் இறுதியில் தோல்வியுற்று மடிவதாகப் புனைவதாயின் தொடக்கத்தில் அவனைப் புகழ்ந்து பாடியிருப்பது பயனற்றதாகும்" என்பதே, மகாகாவியத்தின் இலக்கணத்தை ஓரளவுச் செம்மைப்படுத்தி விளக்கிய முனிவர் தண்டியாசிரியர் ஆவார்.

## 3. 2 தண்டியாசிரியர் கொள்கை.

இவருடைய காவ்யதர்சனத்தின் முதல் பரிச்சேதத்தில் பதினான்கு முதல் இருபத்திரண்டு முடியவுள்ள சுலோகங்களில் மகாகாவிய இலக்கணத்தைத் தண்டியாசிரியர். எடுத்துரைக்கின்றார். அவை,

"மகாகாவியம் சருக்க பந்தம் எனப்பெயர் பெறும்
வாழ்த்து. வணக்கம் வஸ்து நிர்த்தேசம் என்னும்"

மூன்றனுள் ஒன்றை முதலாவதாகக் கொண்டு மகாகாவியம் தொடக்கப்படுதல் வேண்டும். இதன் கதை புகழ்மிக்க பழங்கதையிலிருந்தோ அல்லது மக்களுக்குத் தெரிந்த கதைகளிலிருந்தோ அல்லது மக்களுக்கு நன்கு தெரிந்த கதைகளிலிருந்தோ தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். நான்கு உறுதிப் பொருள்களையும் விளக்குவது இன்றியமையாதது, காவியத்தலைவன் உயர்குடியில் பிறந்தவனாக, நற்பண்புகள் மிக்கவனாக இருத்தல் வேண்டும், நாடு, நகரம், காடு, மலை, பருவம், ஞாயிறு, திங்கள் ஆகியவற்றின் தோற்றம், மறைவு, பொழில் விளையாடல், புனலாடுதல், உண்டாட்டு ஆகிய வருணனைகள் மகாகாவியத்தை அணிசெய்கின்றன. கதைத் தலைவனின் காதல் வாழ்க்கை, இன்பம், கேளிக்கைகள், பிரிவுத்துயர், திருமணம், மக்கட்பேறு போன்ற இன்பியல் வருணனைப் பகுதிகள் இடம்பெறுதல் வேண்டும். கதைத்தலைவனின் அரசியல் வாழ்க்கை. மந்திரம், தூது, இகல், வெற்றி என்பன விரிவாகப்புனையப்படுதல் வேண்டும். மகாகாவியம் மிகச் சிறிய அளவில் நின்று விடாது, அதன் பெருமைக் கேற்ப

நீண்டு அமைதல் வேண்டும். பல்வகை சுவைகளும், உணர்ச்சிகளும் அமைந்து கற்றோருக்குக் களிபேருவகை ஊட்ட வேண்டும். சருக்கம், இலம்பகம் முதலிய உட்பிரிவுகளை உடையதாகப் பகுக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு பிரிவும், ஒவ்வொரு யாப்பில் புனையப்படின் சிறப்பாக அமையும். உட்பிரிவுகள் ஒன்றோடொன்று நன்கு இணைந்து பொருத்தியிருத்தல் வேண்டும். வருணனைப்பகுதிகள் கற்று வல்ல அறிஞர்களின் இதயங்களைப் பிணிக்கும் பெருமையுடையதாக அமையின், அக்காவியம் காலவெள்ளத்தில் அழியாது நின்று நிலைபெறும். மகாகாவியத்தலைவனைத் தொடக்கத்திலேயே அறிமுகப்படுத்தி விட்டு, அவன் தனது ஒப்பற்ற செயல்களால் தன் பகைவரை முறியடிப்பது என்பது இயல்பானது, இவ்வாறு புனையாமல் கதைத்தலைவனுடைய பகைவனின் குலம், வீரம், கல்வி, கேள்வி முதலியவற்றை விளக்கி விட்டு, இறுதியில் அவனினும் மேம்பட்ட குணங்களுடைய கதைத்தலைவன், தன் பகைவனைக் கொல்லுகின்றான். எனப் புனையலாம். இம்முறையும் எனக்கு உடன்பாடுதான் என்ற கூறுகின்றார் தண்டியாசிரியர், தண்டியலங்காரம் பெருங்காப்பியம், பற்றிப் பேசும் போது,

"பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொடு ளிவற்றினொன்
றேற்புடைத்தாகி முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்
தன்னிகரில்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகட னாடு வளநகர் பருவம்
இருசுடர்த்த தோற்றமென் றினையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்

பூம்பொழி னுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியற் புலத்தல் கலவியற் களித்தலென்
றின்ன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரம் தூது செலவிகல் வென்றி
சத்தியிற் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேத மென்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப" (4)

இவற்றிலிருந்து பாமஹருக்கும், தண்டியாசிரியருக்கும் மகாகாவிய இலக்கணங்களைப் பற்றிய கருத்தில் வேறுபாடில்லை என்பது புலனாகின்றது. ஸ்காந்தபுராணம் வடமொழிக் காப்பிய கொள்கைகளை நெறிப்படுத்தி அமைகின்றது எனலாம்.

## 3: 3 கந்தபுராணத்தில் காப்பியக் கூறுகள்

கச்சியப்பரின் கந்தபுராணம், தண்டியாசிரியரின் காப்பியக் கொள்கைகளை எவ்வெவ்வகையில் ஒத்து இருக்கிறது என்பதை ஆராய்வோம்.

3: 3:1 காப்பிய இலக்கணத்தில் முதலில் கூறப்பட்ட வாழ்த்து, வணக்கம், வருபொருள் போன்றவற்றைக் கந்த புராணத்தின் தொடக்கத்தில் காணலாம். பாயிரத்தில் காப்புச்செய்யுட்களைத் தொடர்ந்து, கடவுள் வாழ்த்துப் பாடல்களாக இருபத்தைந்து பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. சிவபெருமான்,

சக்தி, விநாயகக்கடவுள், வைரவக்கடவுள், வீரபத்திரக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள், திருநந்தித்தேவர், திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர், திருத்தொண்டர்கள், சரஸ்வதி தேவி ஆகியோரை வாழ்த்தி வணங்கி செய்யுட்கள் இயற்றியுள்ளார்.

"திருவந்த தொல்லைப் புவனத்தொடு தேவர் போற்றி
பெருவந் தனைசெய் தறிதற்கரும் பெற்றி யெய்தி
அருவந் தனையு முழுவதையு மன்றி நின்றான்
ஒருவன் றனது பதந்தனை யுவத்துள் வைப்பாம்" (5)

என்ற கடவுள் வாழ்த்துப் பாடலாவும்,

"வான்முகில் வழாது பெய்க, மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க, குறைவிலா துயிர்கள் வாழ்க,
நான்மறை யறங்க ளோங்க, நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலகமெலலாம்", (6)

"பங்கயன் முகுந்தனாம் பரமென் றுனனியே
தங்களி லிருபெருஞ் சமர்செய் துற்றுழி
அங்கவர் வெருவ, வங்கி யாயெழ
புங்கவன் மலரடி போற்றி செய்குவோம்" (7)

என்ற பாடல்களாவும் வாழ்த்தும் வணக்கமும் அளிக்கப்பட்டுள்ளன.

"காந்தமாகிய பெருங்கடலும் கந்தவேள்
போந்திடு நிமித்தமும் புவிதன் கண்ணிடை

ஏந்தல் வந்தவுணர்கள் யாருமவ் வழி
மாய்ந்திட வடர்த்தது மற்றுங் கூறுவேன்" (8)

என்ற பாடலில் ஏந்தல் வந்து அவுணர்களை அழித்ததைக் கூறுகின்றேன் என்பதால் வருபொருள் சுட்டியதாகவும் கூறலாம். இதன் கதை புகழ் மிக்க பழங்கதையிலிருந்து எடுக்கப்பட்டதாக இருக்கலாம் என்ற இலக்கணத்திற்கேற்ப இங்கு காந்தமாகிய பெருங்கடலுள் என்பதால், ஸ்காந்தபுராணம் என்ற பெருங்காப்பியத்திலிருந்து எடுக்கப்பட்ட கதை என்று ஆசிரியர் குறிப்பிட்டதாகக் கருதலாம்.

3: 3: 2 காப்பிய இலக்கணத்தில் கூறப்பட்டுள்ள ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், நகரப்படலம் போன்ற காப்பிய உறுப்புகளும் மிக அழகாக விரிவாகப் படைக்கப்பட்டுள்ளன. இப்படலங்களில் பெரும்பான்மைப் பாடல்களை அணி நயம் அழகு செய்கின்றன. ஞாயிறு, திங்கள் வருணனைகள் காப்பியங்களில் இடம்பெற வேண்டும் என்ற நியதியை இக்காப்பியத்தின் பல பாடல்கள் நிறைவு செய்கின்றன.

"மிக்க தாருக வனத்தினை யொத்தது விசும்பில்
தொக்க பேரிருள் மாதரொத் தனஉடுத் தோற்றஞ்
செக்கர் ஈசனை யொத்ததொண் போனகஞ் செறிந்த
கைக்க பாலம தொத்தது கதிரிளம் பிறையே" (9)

"நிலவு லாகிய ககனமா நீடுபாற் கடலில்
குலவு நின்றதோர் பொருளெலாங் கொண்டு கொண்டேகி
உலகில் நல்குவான் முயலெனும் ஒருமகன் உய்ப்பச்
செலவு கொண்டதோர் தோணி போன் றதுசிறு திங்கள்" (10)

உற்பத்திக் காண்டத்தில், குமாரபுரில் படலத்தில் உள்ள இந்த இருபாடல்கள் தவிர, பல பாடல்கள் ஞாயிறு திங்கள் வருணனைகளாக இக்காப்பியமெங்கும், குறிப்பாக யுத்த காண்டத்தில் பரவலாகக் காணப்படுகின்றன.

3.3.3 கதைத்தலைவனின் காதல்வாழ்க்கை, இன்பம், கேளிக்கைகள், பிரிவுத்துயர், திருமணம் போன்ற இன்பியல் வருணனைப் பகுதிகள் இடம்பெறல் வேண்டும் என்பதற்கேற்ப, வள்ளியம்மை திருமணபடலத்தில் பல பாடல்கள் அமைந்துள்ளன.

"போர்த்தொழில் கடந்த வைவேற் புங்கவன் அருளால் வந்த
சீர்த்திநவ்வி தன்னைச் சிவமுனி என்னுந் தூயோன்
பார்த்தலும் இளமைச் செல்வி படைத்திடும் பிறனிற்கண்ட

தூர்த்தனின் மையல் எய்திக் காமத்தால் சுழல லுற்றான்" (11)

"மைவிழி சிவப்பவும் வாய் வெளுப்பவும்
மெய்வியர் வடையவும் நகிலம் விம்மவுங்
கைவளை நெகிழவுங் காட்டுந் தண்சுனை
எவ்விடை இருந்துள தியம்புவாயென்றாள்" (12)

இவை இன்பம் என்ற இன்பியல் வருணனைக்கு எடுத்துக்காட்டான பாடல்கள். பிரிவுத்துயர் என்ற இன்பியல் வருணனைப்பகுதியும் காணப்படுகின்றது, முருக் கடவுள் தினைப்புனத்திற் சென்று வள்ளியம்மையைக் காணாது புலம்புகின்ற பாடல்கள் பிரிவுத்துயர் கூறினமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

"கனந்தனை வினவும் மஞ்ஞைச் கணந்தனை வினவும் ஏனற்
புனந்தனை வினவும் அம்மென் பூவையை வினவுங் கிள்ளை
இனந்தனை வினவும் யானை இரலையை வினவுந் தண்கா
வனந்தனை வினவும் மற்றை வரைகளை வினவு மாதோ" (13)

"வாடினான் தளர்ந்தான் நெஞ்சம் வருத்தினான்
மையற் கெல்லை
கூடினான் வெய்துயிர்த்தான் குற்றடிச் சுவடு தன்னைத்
நாடினான் திகைத்தான் நின்று நடுங்கினான் நங்கை தன்னைத்
தேடினான குமரற் மீது திருவிளையாடல் போவாம்" (14)

இவ்வாறு, வள்ளியம்மை திருமணப்படலம் முழுவதுமே இன்பியல் பகுதியாகக் காணப்படுகின்றது.

கதைத்தலைவனின் அரசியல், வாழ்க்கை, மந்திரம் தூது, இகல், வென்றி என்பன யுத்த காண்டத்தில் மிகவிரிவாகக் கூறப்பட்டுள்ளன. வீரவாகுத்தேவனின் தூது, மகேந்திரகாண்டத்தில் மிக அற்புதமாகப் படைக்கப்பட்டுள்ளது.

3.3.4 காப்பியம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருட்களை விளக்குவதாக அமைதல் இன்றியமையாதது. என்பதற்கேற்ப, இக்காப்பியம் இந்நான்கு உறுதிப் பொருட்களையும் கூறுவதாகவே அமைந்துள்ளது.

"அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே என்ப" (15)

என்பது நன்னூலார் இலக்கணம்.

### 3: 3: 4: 1 அறம்

இறைவனை அடைவதற்குப் பார்வதிதேவி தவம் செய்தல், சிவமுனிவர்க்குச் சரியை, கிரியை, யோகம் என்ற மூன்றையும் உணர்த்தல். (ஞானயோகம்நவிலற் பாலதன்று, அது இவ்வாறு மவுனத்தோடு இருந்து நம்மையறிதலாகும். என்று உபதேசிப்பது) என்பன அறம்பற்றியன.

"அந்தமில் ஆகமத்தின் அரும்பதம் மூன்றும் கூறப்
புந்திய தொடுங்கும் ஞானப் போதகம் போதியென்ப" (16)

"சிரநிரை அனந்தகோடி திளைத்திடும் உரத்திற்சீர்கொள்
காதல மொன்று சேர்த்தி மோன முத்திரையைக் காட்டி
ஒருகணஞ் செயலொன்றின்றி யோகுசெய் வாரினூற்றான்" (17)

என்ற பாடல்கள் வழி, முனிவர்க்குச் சிவபெருமான் உணர்த்திய நெறிமுறைகள் ஆகியவை அறத்தை உணர்த்துவனாக அமைந்துள்ளன.

தாரகனை வதம் செய்ததும், சூரபன்மன் முருகனை எதிர்க்க எழுகின்றான். உடனே அமைச்சர் அமோகன் சூரபன்மனிடம் "ஆற்றல் மிக்காரும் ஒருகாலத்தில் ஆற்றலை இழப்பர், ஆற்றல் அற்றவர் ஒரு காலத்தில் வீரராய் இருப்பர் என்ற உண்மையை அறிவுறுத்துதல்,

"வலியரும் ஒரு காலத்தில் வன்மையை இழப்பர் ஆற்ற
மெலியரும் ஒரு காலத்தில் வீரராயத் திகழ்வர் அன்றே'" (18)

காசிப முனிவர் சூரபன்பன் முதலிய தம் மைந்தர்கட்கு தவத்தின் பெருமையை உணர்த்துதல் போன்றனவும், உற்பத்திகாண்டம்- காசிபனுபதேசப்படலம் முழுவதும் அறக்கருத்துக்களே.

குச்சக முனிவர் தன்மகனுக்கு இல்லறத்தின் பெருமையைக் கூறுவது, மார்க்காண்டேயன் கதை, இவற்றின் வாயிலாக தவத்தின் பெருமையைக் கூறல் போன்றவையும் (அசுர காண்டம்- மார்க்கண்டேயப் படலம்) அறம் பற்றியவையே.

சயந்தனுக்கு நாரதர் ஊழ்வினைப்பயன், அறிவுடையார் செயல், உலகத்திபல்பு ஆகியவற்றை எடுத்துரைப்பதைக் காணலாம். சயந்தனைப் பானுகோபன் எதிர்த்து ஆற்றலிழக்கச் செய்து, விண்ணுலகை எரித்த செய்தியைக் கூறுகையில் செல்வம் நிலையாமை கூறப்படுகிறது. சயந்தன் சிறையிலிருக்கும் போது, இறைவனை நோக்கிப் புலம்புகையில் பல அறக்கருத்துக்களை வலியுறுத்துகின்றான். (மகேந்திரகாண்டம்- சயந்தன் புலம்புறு படலம்)

### 3: 3: 4: 2 பொருள்:

இது பற்றி உணர்த்தும் வகையிலும் பல பாடல்கள் பரக்கக் காணலாம். பொருள் என்பது அகப்பொருள் புறப்பொருள் என்பன. அகப்பொருள் கருத்துக்களாகக் கொள்ளதக்கன. சிவன், பார்வதி திருமணம் புரிந்து இன்பமுடன் வாழ்தல், முருகன், வள்ளி இவர்களின் காதல், திருமணம் ஆகிய நிகழ்ச்சிகளாகும். முருகன் வள்ளி காதல் திருமணம் அதனையொட்டிய நிகழ்ச்சிகள்யாவும் குறிஞ்சித்திணைக்குரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றை உணர்த்துவனவாய் அமைந்துள்ளன.

வீரவாழ்க்கையைப் பற்றிக் கூறுவது புறம் எனப்படுவது. கந்தபுராணத்தில் முருகனது திருவிளையாடல் நிகழ்ச்சிகள் யாவும் வீரவிளையாட்டுகளாகவே அமைந்துள்ளன. கருடனையும் வாசுகி என்னும் பாம்பையும் போர் புரிய வைப்பதும் (1:14:25), குலமலைகள் அனைத்தையும் ஓரிடத்தே சேர்ப்பதும் (1:14:23), பாதாளத்திலுள்ள நாகர்களை நிலத்தில் சேர்ப்பதும், நிலத்தில் உள்ள கடல்கள் அனைத்தையும் பாதாளத்தில் புகவிடுதலும் (1:14:26) போன்ற பல செயல்கள் முருகனின் வீரத்தைப் பறை சாற்றுகின்றன. இச்செயல்களைக் கண்ட தேவர்கள் இவை மாய அவுணனின் செயல் என எண்ணுவதும் முருகனிடம் போர் தொடுப்பதும், முருகன் அவர்களை வெல்லுவதும், மட்டுமல்ல, கதிரவனை வாயுவை தீக் கடவுளை வெல்வது யாவும் புறப்பொருள் கருத்துக்களாக அமைந்துள்ளன. ( திருவிளையாடல் படலம் முழுவதும் )

மாயபுரியில் இருக்கும் தாரகனை வீரபாகுத் தேவர் எதிர் கொள்வதும் தாரகன் பூதகணங்களைத் தாக்குவதும் புறப்பொருளுக்கு எடுத்துக்காட்டு. அவை மிக அழகாக, தகுந்த ஓசை நயத்துடன் இயற்றப்பட்டுள்ளன. எடுத்துகாட்டாக ஒரு பாடல்;

"அல்லெனப் பட்ட மேனி அவுணகட் கரசன் கையிற்
கல்லெனப் பட்ட தண்டாற் புடைத்தலுங் கரங்கள் சென்னி
பல்லெனப் பட்ட சிந்திப் பாய்புனல் ஒழுக்கிற் சாய்ந்த
புல்லெனப் பட்ட தம்மா பூதர்தஞ் சேனையெல்லாம்". (19)

தாரகன் மாயப் போர் புரிதலும், வீரபாகுத் தேவரின் துணை வர்களை மயங்க வைப்பதும், பின் முருகப் பெருமானும்

தாரகனும் போர்புரிதலும் ஆகிய நிகழ்சிகள் யாவும் புறப்பொருளுக்கு எடுத்துக்காட்டுகளாய் அமைந்துள்ளன. யுத்தகாண்டத்தில் வரும் எல்லாப்பாடல்களும், போர் நிகழ்ச்சிகளை வருணிப்பதாக அமைந்துள்ளன. தட்ச காண்டத்தில் சிவபெருமானும், சலந்தரனும் போர்புரிவதும் புறத்தின்பாற் படுவதாகவே அமைந்துள்ளது.

தூது போன்ற நிகழ்ச்சிகள் காப்பியத்தில் சேர்க்கப்படல் வேண்டும் என்பதும் ஒரு மரபு. அதன் படி கந்த புராணத்தில் வீரவாகுத்தேவர் சூரபன்பனிடம் தூது செல்லும் நிகழ்ச்சி அமைக்கப்பட்டுள்ளது. இது மிக விரிவாக இலக்கிய நயங்களுடன் அழகுற இயற்றப்பட்டுள்ளது, மகேந்திர காண்டத்தில் அவைபுகு படலத்தில் வீரபாகுத்தேவரின் தூது நிகழ்ச்சியை விளக்கியுள்ளார்.

3. 3. 5. மகா காவியமானது அதன் பெருமைக் கேற்ப பல்வகைச் சுவைகளுடன், உணர்ச்சிகளுடன் அமைந்து கற்றோர்க்குக் களிபேருவகை ஊட்ட வேண்டும் என்றஇலக்கணத்திற் கேற்ப எண்வகைச் சுவைகளும் நிரம்பப் பெற்றனவாய், பல்வகை உணர்ச்சிகளைக் காட்டும் பாத்திரங்களைக் கொண்டன வாய் அமைந்துள்ளது.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்
நம்பால் எட்டே மெய்ப்பாடென்ப" (20)

என்ற நூற்பாவில் கூறப்பட்டிருக்கும் எண்வகைச் சுவைகளும் கொண்ட கந்தபுராணம், படிப் போர்க்கு களிபேருவகையைத் தருகின்றது.

T 77?

3. 3. 6. காப்பிய உறுப்புகளில் ஒன்றான கிளைக்கதைகள் என்ற மரபினையும் கந்தபுராணத்தில் நிரம்பக் காணமுடிகிறது. பெரும்பாலும் கதையோடு தொடர்புடையனவாய் அமைந்துள்ள மையும் சிறப்பே. அசுர காண்டத்தில் காசிப முனிவர் அசுரர்க்கு உபதேசம் செய்யுமிடத்தில் பல கிளைக்கதைகளைத் தந்துள்ளார். அவை மிருககண்டுயர் கதை, குச்சகமுனிவர்கதை, தருமதத்தன் கதை, மார்க்கண்டேயர் கதை போன்றவை. இவை மார்க்கண்டேயப் படலத்தில் கூறப்பட்டுள்ளன. (அசுர காண்டம்) மேலும் அகத்தியர் கதையும், வில்வலன் வாதாவி கதையும் கூறப்பட்டுள்ளன. இவையும் கதையோட்டத் தோடு சேர்ந்து செல்கின்றன.

3. 3. 7 காப்பியம் சுருக்கம், இலம்பகம் முதலிய உட்பிரிவுகளைக் கொண்டதாக பகுக்கப்படுதல் வேண்டும் என்பதற்கேற்ப கந்தபுராணம் காண்டங்கள், படலங்கள் போன்ற உட்பிரிவுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது, உற்பத்தி காண்டம், (26 படலங்கள் கொண்டது.)அசுர காண்டம் (43 படலங்கள்), மகேந்திர காண்டம் (21 படலங்கள்) யுத்த காண்ட் (16 படலங்கள்) தேவகாண்டம் (5 படலங்கள்) தக்க காண்டம் (24 படலங்கள்) என்ற முறையில் அமைந்துள்ளது.

3. 3. 8 தன்னேரில்லாத் தலைவரின் பெருமையும் கூறப்பட்டுள்ளது. பகைவனாகிய சூரபன்மனின் திறமையும் கூறப்பட்டுள்ளது. இத்தகைய வீரன் ஒருவனை, காப்பியத்தலைவன் வென்றான் என்ற முறையில் அமைந்த கந்தபுராணம், தண்டியாசிரியர் கூறிய இக்கருத்துக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது எனலாம். அவர் கூறியதாவது;

"கதைத்தலைவனுடைய பகைவனின் குலம், வீரம், கல்வி, கேள்வி, முதலியவற்றை விளக்கி விட்டு, இறுதியில் அவனினும் மேம்பட்ட குணங்களையுடைய கதைத்தலைவன் தம் பகைவனைக் கொன்றான் என்றும் புனையலாம். இம்முறையும் எனக்கு உ ட ண்டாமே ".

## 3. 4 ஏனைய சிறப்புகள்.

கந்தபுராணத்தின் முதல் பாடலாகிய

"திகட சக்கரச் செம்முக மைத்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம்" (21)

என்ற பாடல் கலிவிருத்தப்பா வகையைச் சேர்ந்தது, அதுபோன்று இக்காப்பியத்தை நிறைவு செய்யும் பாடலாகிய,

"பாராகி ஏனைப் பொருளாய் உயிர்ப்பன் மையாகிப்
பேரா வுயிர்கட் குயிராய்ப் பிறவற் றுமாகி
நேராகித் தோன்றல் இலாதாகி நின்றான் கழற்கே
ஆராத காதலொடு போற்றி அடைதும் அன்றே " (22)

என்ற பாடல் கலிவிருத்தப்பா வகையைச் சேர்நததே. இது இக்காப்பியத்தில் அமைந்த சிறப்பு கம்பன், சேக்கிழார் போன்றோரின் புராண மரபுக்கேற்ப கலிவிருத்தப்பாவிலேயே தொடங்கி முடிகின்றது.

இக்காப்பியம் முழுவதும் அணிநயம் நிரம்பக் காணப்படுகின்றது. உவமையணி, இல்பொருள் உவமையணி, தற்குறிப்பேற்ற அணி, எடுத்துக்காட்டு உவமையணி, உயர்வு நவிர்ச்சி அணி போன்ற பல அணிகள் காப்பியத்தை அழகு செய்கின்றன. மேலும் ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களை ஆசிரியர் ஆட்சி செய்வதும் கண்டுகளிக்கத்தக்க ஒரு அழகு . எடுத்துக்காட்டாக உற்பத்தி காண்டத்தில் தகரேறு படலத்தில் ஆட்டைக்குறிக்க- செச்சை, தகர், மேடம், மறி, ஆடு, அஜம், ஏழகம் எனப் பல சொற்கள் ஆளப்பட்டுள்ளன. மேலும் கம்பராமாயணத்தில் காணப்படும் கவிசாதுர்யங்களையும் காணலாம். எடுத்துக்காட்டாக மாயை என்பவளின் நடையின் பேரழகைக் கூற வந்தவர்,

"மாது நடந்திட ஞாலம் ஆங்கோர் பூவதோ
அது பூவன்றேல் பொன்னடி பொருத்து மோதான்"

எனப் பூ என்னும் சொல்லின் இருபொருள் கொண்ட சிலேடை அழகு (பூ-மலர், பூமி) மிக அருமையாக உள்ளது. இரட்டைப்பொருள் படும்படி, சூரனை நோக்கிக் கூறுமடத்து 'அகிலமாள்வாய்' (உற்பத்தி காண்டம்- அசுரேந்திரன் மகேந்திரர் செல்படலம் (பா. எண் 55) என்ற இடத்து மாள்வாய் என வருந்தொனியும் கவனிக்கற் பாலது. அகத்தியரைக் கொல்ல நினைத்த வில்வலன் அவரை நோக்கிக் கூறும் "அருந்தவம் புரிந்தேன் இன்று முடிவுற வந்தி" (அசுர காண்டம் விலவலன் வாதாபிப்படலம்- பா.எண் 5) என்ற இடத்து என் தவம் முடிந்தது, நீர் முடிவுறப் போகிறேன், நான் முடிவுறப் போகிறேன் என மூன்று பொருள்கள இங்கு ஒருங்கே அமைந்துள்ளது மிக மிக வியக்கத்தக்கதாம்.

இவையன்றி தூய ஆற்று நீரோட்டம் போல் எளிதான நற்றமிழ் நடையில் இக்காப்பியம் அமைந்துள்ளது.

### 3. 5. முடிவுரை

இவ்வாறு கந்தபுராணம் தண்டியாசிரியர் குறித்த காப்பிய இலக்கணப்படி, அனைத்து காப்பியக்கூறுகளைக் கொண்டும், ஏனைய பல சிறப்புகளையும் கொண்டு பெருமைமிக்க பேரிலக்கிய மாகத் திகழ்கின்றது.

# அடிக்குறிப்புகள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | பாமஹரின் காவியாலங்காரம் - 1956 - | பக்கம் | 16,17 |
| 2. | மேலது | பக்கம் | 18-23 |
| 3. | காவ்ய தர்சம் - 1959 - சுலோகங்கள் | | 18-23 |
| 4. | தண்டியலங்காரம் - 1947 - | நூற்பா | 11 |
| 5. | கந்தபுராணம் - கடவுள் வாழ்த்து - | பா.எண் | 1 |
| 6. | க.பு - பாயிரம் - கடவுள் வாழ்த்து - | பா. எண் | 5 |
| 7. | க.பு - - கடவுள் வாழ்த்து - | பா.எண் | 5 |
| 8. | க.பு - - அவையடக்கம் - | பா.எண் | 14 |
| 9. | க.பு - உற்பத்தி காண்டம் குமாரபுரிப்படலம் | பா.எண் | 3 |
| 10. | க.பு - மேலது | பா.எண் | 4 |
| 11. | க.பு - தக்ககாண்டம்- வள்ளியம்மைதிருமணப்படலம் | பா.எண் | 21 |
| 12. | க.பு - மேலது | பா.எண் | 124 |
| 13. | க.பு - மேலது | பா.எண் | 159 |
| 14. | க.பு - மேலது | பா.எண் | 60 |
| 15. | நன்னூல் - கழக வெளியீடு | நூற்பா | 10 |
| 16. | க.பு - உற்பத்திகாண்டம்-மேருப்படலம் | பா.எண் | 10 |
| 17. | க.பு - உ.கா - மேலது | பா.எண் | 12 |
| 18. | க.பு - உ.கா - காசிபனுபதேசப்படலம் | பா.எண் | 18 |
| 19. | க.பு - உ.கா -தாரகன் வதை படலம் | பா.எண் | 52 |
| 20. | நன்னூல் - கழக வெளியீடு | நூற்பா | 20 |
| 21. | க.பு - பாயிரம் - | பா.எண் | 1 |
| 22. | க.பு தக்ககாண்டம்-வள்ளியம்மை திருமணப்படலம் | பா.எண் | 267 |
| 23. | க.பு -அசுரகாண்டம் மாயைப்படலம் | பா.எண் | 61 |